**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.</u>**

முன்னிலை: **திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**<u>2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30–ஆம் நாள் திங்கள்கிழமை</u>**
**<u>IA.08/2023 in IA 07/2022 O.S.186/2013</u>**

ராமச்சந்திரன்
த/பெ. ராமசாமி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

அருண்ராஜ்
த/பெ. ராகவன் ... எதிர்மனுதாரர்/4 ம் பிரதிவாதி

இம்மனு இறுதியாக 04.10.2023–அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக, சென்ற 17.02.2023 அன்று மனுதாரருக்கெதிராக I.A.No.7/2022–ல் ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்தும், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள மறுப்புரையை ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டுமென்று சி.பி.சி. ஆர்டர் 9 ரூல் 7–ன் படி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரரின் மனுவின் சுருக்கம் :</u>–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரர் பெயரில் தாவா தொடர்ந்து அதில் எதிர்மனுதாரர் தரப்பில் I.A.No.7/2022 ல் என்ற நம்பரின் கீழ் மனு தாக்கல் செய்து, அதில் மனுதாரர் தரப்பில் மறுப்புரை தாக்கல் செய்ய வேண்டி வாய்தா இருந்த அன்று மனுதாரர் தரப்பு வழக்கறிஞருக்கு இருதய சிகிச்சை செய்து படுக்கையில் இருந்ததால், மனுதாரர் தரப்பு மறுப்புரை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், அதனால் கடந்த 17.02.2023 அன்று மறுப்புரை தாக்கல் செய்யவில்லை என்று மனுதாரருக்கு எதிராக எக்ஸ்பார்ட்டி உத்தரவு

ஏற்பட்டுவிட்டது என்றும், இது வேண்டும் என்று ஏற்பட்ட காரணம் அல்ல என்றும், மேற்படி மறுப்புரையும் இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே சென்ற 17.02.2023 அன்று மனுதாரருக்கெதிராக I.A.No.7/2022–ல் ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்தும், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள மறுப்புரையை ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டுமென்று குறிப்பிட்டு மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரரின் மனு சரியல்ல என்றும், உண்மைக்குப் புறம்பானது என்றும், சுத்தப் பொய்யுடையது என்றும், எதிர்மனுதாரர் பெயரில் தாவாத் தொடர்ந்துள்ளார் என்றும், அதில் சென்ற எதிர்மனுதாரர் தரப்பில் I.A.No.7/2022 என்ற நம்பரின் கீழ் மனுதாக்கல் செய்து அதில் மனுதாரர் தரப்பில் மறுப்புரை தாக்கல் செய்ய வேண்டி வாய்தா இருந்தது என்பது எல்லாம் சரி என்றும், ஆனால் மனுதாரர் தரப்பில் அவரது வழக்கறிஞருக்கு இருதய சிகிச்சை செய்து படுக்கையில் இருந்ததால் அவரது மறுப்புரை தாக்கல் செய்ய முடியவில்லை என்பது சரியல்ல என்றும், உண்மைக்குப் புறம்பானது என்றும், அதனால் கடந்த 17.02.2023 ம் தேதியன்று மறுப்புரை தாக்கல் செய்யவில்லை என்று அவருக்கெதிராக எக்ஸ்பார்ட்டி உத்தரவு ஏற்பட்டுவிட்டது என்பதும் இதுவேண்டும் என்று ஏற்பட்ட காரணம் அல்ல என்பதும் எல்லாம் சரியல்ல என்றும், மனுதாரருக்கு வழக்கில் நல்லக் கட்சியில்லை என்றும், வேண்டுமென்றே எதிர்மனுதாரை அலைக்கழித்து அவருக்கு தொல்லைகொடுக்க வேண்டுமென்பதற்காக எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்ய மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், ரத்து செய்ய அவர் சொல்லும் காரணம் சரியல்ல என்றும், எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு இவ்வெதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவேனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

**<u>6) பிரச்சனைக்கான தீர்வு:-</u>**

மனுதாரர் தரப்பு வாதத்தில் எதிர்மனுதாரர் பெயரில் தாவா தொடர்ந்து அதில் எதிர்மனுதாரர் தரப்பில் I.A.No.7/2022 ல் என்ற நம்பரின் கீழ் மனு தாக்கல் செய்து, அதில் மனுதாரர் தரப்பில் மறுப்புரை தாக்கல் செய்ய வேண்டி வாய்தா இருந்த அன்று மனுதாரர் தரப்பு வழக்கறிஞருக்கு இருதய சிகிச்சை செய்து படுக்கையில் இருந்ததால், மனுதாரர் தரப்பு மறுப்புரை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், அதனால் கடந்த 17.02.2023 அன்று மறுப்புரை தாக்கல் செய்யவில்லை என்று மனுதாரருக்கு எதிராக எக்ஸ்பார்ட்டி உத்தரவு ஏற்பட்டுவிட்டது என்றும், இது வேண்டும் என்று ஏற்பட்ட காரணம் அல்ல என்றும், மேற்படி மறுப்புரையும் இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே சென்ற 17.02.2023 அன்று மனுதாரருக்கெதிராக I.A.No.7/2022-ல் ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்தும், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள மறுப்புரையை ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டுமென்று குறிப்பிட்டு வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

7. மேற்படி மனுதாரர்கள் தரப்பு வாதத்தை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தில் மனுதாரர் மனு சங்கதிகள் தவறானது என்றும், மனுதாரருக்கு வழக்கில் நல்லக் கட்சியில்லை என்றும், வேண்டுமென்றே எதிர்மனுதாரை அலைக்கழித்து அவருக்கு தொல்லைகொடுக்க வேண்டுமென்பதற்காக எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்ய மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், ரத்து செய்ய அவர் சொல்லும் காரணம் சரியல்ல என்றும், எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

8. இருதரப்பிலும் மேற்சொன்னவாறு எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலித்ததில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி மனுவை பொறுத்து எதிர்மனுதார் தரப்பில் சொல்லப்பட்ட மறுப்புரை சங்கதிகள் ஏற்புடையதாக உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது. இருப்பினும் மனுதாரர் தரப்பில் வைக்கப்பட்டுள்ள வாதத்தை பரிசீலிக்கும்போதும், அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட உயிலில் உள்ள ராகவனின் கையெழுத்தை ஒப்புக்கொள்ளப்பட்ட

14.10.202001ம் தேதிய ராகவனின் கிரையப் பத்திரத்தில் உள்ள ராகவனின் கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்த்து அறிக்கை சமர்ப்பிக்க ஒருவரை நியமித்து Expert opinion–க்கு அனுப்ப தாக்கல் செய்யப்பட்ட I.A.No.7/2022 மனுவில் மனுதாரர் தரப்பு எதிருரை தாக்கல் செய்யாததால் கடந்த 17.02.2023ல் எக்ஸ்பார்ட்டி உத்தரவு ஏற்பட்டுள்ளதை ரத்து செய்ய வேண்டி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மேற்படி மனுவினை பரிசீலனை செய்து பார்க்கும் போது I.A.No.7/2022 மனுவானது அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உயில் ஆவணத்தின் உண்மை தன்மையை அறிவதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனு என்பதால் மேற்படி மனுவில் மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் மனுதாரருக்கு எதிராக எக்ஸ்பார்ட்டி உத்தரவு ஏற்பட்டுள்ளது என்பது தெரிகிறது. மேலும், மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாததற்கு கூறும் காரணம் ஏற்றுக்கொள்வதாக இல்லை என்றாலும், அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள உயில் மற்றும் கிரயப்பத்திரம் என்பது வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்பதால் அதன் உண்மை தன்மையை நிரூபிப்தற்கு மேற்படி மனுவில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை தள்ளுபடி செய்வதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் தரப்பினர்களுக்கு அவரவர் தரப்பு கட்சியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது என்றும், அப்பொழுதுதான் வழக்கின் உண்மை தன்மையை காண்பதற்கும், வழக்கின் தீர்க்கமான முடிவு ஏற்படுவதற்கும், பல வழக்குகள் ஏற்படும் நிலையை தடுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அசல் வழக்கானது நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு பெருத்த பாதிப்பு ஏதும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மேற்படி மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு போக்குவரத்து போன்ற சிற்சில செலவுகள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதால் மேற்படி மனுவானது

செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என கருதி அதன்படியே இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

11. முடிவில், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு சொலவுத்தொகை ரூ.500/–ஐ வரும் 01.11.2023 தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

அழைக்க : 03.11.2023

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

S GANESH Digitally signed by S GANESH Date: 2023.10.30 16:33:51 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை

S GANESH Digitally signed by S GANESH Date: 2023.10.30 16:34:00 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.